www.kalvikural.com



# ACHAMILLAI - PG TRB ECONOMICS

## பன்னாட்டுப் பொருளாதாரம்

## முக்கியக் கருத்துக்கள்

- பன்னாட்டு வாணிபம் என்பது இரண்டு வேறுபட்ட நாடுகளுக்கு இடையேயான வாணிபம் ஆகும்.
- முழு நன்மை என்ப்து ஒரு நாடு மற்றொரு நாட்டைவிட பொருள் உற்பத்தியில் சிறந்து விளங்குவதால் ஏற்படும் நன்மை ஆகும்
- மதிப்பு பற்றிய அல்லது உழைப்புக் கோட்பாடு என்பது ஒரு பொருளின் மதிப்பு அல்லது விலை அதை உற்பத்தி செய்கின்ற தொழிலாளர்களின் கால அளவிர்க்குச் சமமானது எனக் கூறும் கோட்பாடு ஆகும்.
- முழு சிறப்புத் தேர்ச்சி என்பது ஒரு நாடு ஒரே ஒரு பொருளை மட்டுமே உற்பத்தி செய்து வாணிபம் செய்வது ஆகும்
- வாய்ப்பு வழி செலவு என்பது ஒரு பண்டத்தை உற்பத்தி செய்யும் போது மற்றொரு பண்டத்தை தியாகம் செய்ய ஆகும் செலவு ஆகும்
- சமுதாய சமநோக்கு வளைகோடு என்பது இரண்டு பொருட்கள் அடங்கிய பல்வேறு தொகுப்புகள் மூலம் ஒரு சமுதாயம் கொண்ட சம அளவு மனநிறைவு அடைவதைக் குறிக்கிறது.
- ஹெக்ஸர் ஒலின் கோட்பாடு என்பது உற்பத்திக் காரணி வளங்கள் அதிகமாக உள்ள நாடு அதைப் பயன்படுத்தி மலிவான விலையில் பொருட்களை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்வதை விளக்கும் கோட்பாடு ஆகும்
- வாணிப வீதம் என்பது ஒரு நாட்டின் ஏற்றுமதி பந்தத்தின் விலைக்கும், அதன் இறக்குமதி பண்டத்தின் விலைக்கும் இடையேயான விகிதம் ஆகும்.

அச்சமில்லை 9786226622

www.kalvikural.com



- வாணிப சூழல் என்பது வாணிப நடவடிக்கைகளில் ஏற்படும் ஏற்ற இறக்கங்கள் ஆகும்
- அயல்நாட்டு செலுத்துநிலை என்பது ஓர் ஆண்டில் ஒரு நாடு மற்ற நாடுகளுடன் கொண்டுள்ள பணவியல் தொடர்புடைய விவரங்கள் அடங்கிய குறிப்பு ஆகும்
- ரெபென்ஸ்கி கோட்பாடு என்பது உற்பத்திக் காரணியின் அளவு அதிகரித்தால் அந்தக் காரணியை சார்ந்த பொருளின் உற்பத்தி அதிகரிக்கும் என்பதை விளக்கும் கோட்பாடாகும்.
- மூலதன இடப்பெயர்ச்சி என்பது மூலதனம் ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிர்க்கு இடம்பெயருதல் ஆகும்
- நேரடி முதலீடு என்பது ஒரு நாட்டின் சேமிப்பை மற்றொரு நாட்டின் முதலீட்டாக செய்வது
- பன்னாட்டு நிறுவனங்கள் என்பது வெளிநாட்டு நிறுவனங்கள் ஆகும்.
- அந்நிய மூலதனம் என்பது வெளிநாட்டிலிருந்து பெறப்படுகிற மூலதனம் ஆகும்
- அந்நிய முதலீடு என்பது வெளிநாட்டில் வாசிப்பவர்கள் மற்றொரு நாட்டில் முதலீடு செய்வது வெளிநாட்டு முதலீடு ஆகும். அந்நாட்டு அரசோ அல்லது தனியார் துறையோ இதை மேற்கொள்கிறது.
- பன்னாட்டுக் கழகங்கள் என்பது ஒரு நிறுவனம் தம் தொழிலை ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளில் மேற்கொள்ளுதல் ஆகும்
- கட்டமைப்பு வசதிகள் என்பது பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையான போக்குவரத்து, மின்சாரம் மற்றும் தொலை தொடர்பு வசதிகள் ஆகும்
- பொதுக் கடன் என்பது அரசாங்கத்தின் கடன் ஆகும்

அச்சமில்லை 9786 22 66 22

- அயல்நாட்டு செலுத்துநிலை என்பது ஒரு நாடு பிற நாட்டினருக்குச் செலுத்த வேண்டிய பண தொகையாகும்
- பின்தங்கிய நாடுகள் என்பது வளர்ச்சிக் குறைந்த நாடுகள் ஆகும்
- முதன்மைத் துறை என்பது வேளாண் தொழில் சார்ந்த துறை ஆகும்
- புத்தாக்கங்கள் என்பது பழைய கண்டுபிடிப்புகளில் புதுமையை செய்தல் ஆகும்
- தலா வருமானம் என்பது ஒரு நாட்டில் உள்ள மக்களின் சராசரி வருமானம் ஆகும்
- பொருளாதார சிக்கனங்கள் என்பது ஒரு நிறுவனம் பொருட்களை உற்பத்தி செய்யும் பொது பெறக்கூடிய சிக்கனங்கள் ஆகும்
- தடையில்லா வாணிபக் கொள்கை என்பது சுதந்திர வர்த்தகக் கொள்கை ஆகும்
- வாணிபத் தடைகள் என்பது பன்னாட்டு வாணிபத்தில் அரசு பலவித கட்டுப்பாடுகளை விதித்தல் ஆகும்
- காப்பு வரி என்பது இறக்குமதிப் பொருட்கள் மீது விதிக்கப்படும் வரியாகும்
- மானியம் என்பது ஒரு பந்தத்தின் விலையைக் குறைத்து விர்க்கும் பொருட்டு, ஒரு நிறுவனத்திற்கோ அல்லது தொழிற்சாலைக்கோ வழங்கப்படும் அரசின் உதவித்தொகை ஆகும்
- ஸ்டாப்ளர் காப்பு வரி என்பது காப்பு வரி மூலம் ஒரு நாட்டின் பற்றாக்குறையுள்ள காரணிகளின் வருமானத்தை அதிகப்படுத்துதல் பற்றி விளக்கும் கோட்பாடு ஆகும்
- உத்தம காப்பு வரி என்பது நாட்டின் நலத்தை உச்சப்படுத்தும் சுங்க வரி ஆகும்

அச்சமில்லை 9786 22 66 22

- ⇨ பங்களவு என்பது பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் அல்லது பிற நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் பொருட்களின் அளவிர்க்கு விதிக்கப்படும் கட்டுப்பாடாகும்
- ⇨ அளவுசார் கட்டுபாடு என்பது இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் அளவை நிர்ணயித்து அதனை கட்டுப்படுத்துதல் ஆகும்
- ⇨ அரசு வாணிபம் என்பது பன்னாட்டு வாணிபத்தில் அரசே நேரடியாக பங்கு பெறுதல் ஆகும்
- ⇨ தடையில்லா வாணிபம் என்பது பன்னாட்டு வாணிபத்தில் தடைகளற்ற நிலை ஆகும்
- ⇨ தொழிற் பாதுகாப்பு என்பது இறக்குமதி வரி, பங்களாவுகள் போன்றவைகள் மூலம் பன்னாட்டு வாணிபத்தில் தடைகளை ஏற்படுத்துவது ஆகும்
- ⇨ முற்றுரிமை என்பது ஒரு அங்காடியில் ஒரே ஒரு உற்பத்தியாளர் மட்டும் இருப்பதாகும்
- ⇨ இலந்தொழில் என்பது புதியதாக தொடங்கப்படுகின்ற தொழில்கள் ஆகும்
- ⇨ குவித்தல் என்பது ஒரு நாடு தனது நாட்டில் விற்க்கின்ற விலையைவிட குறைந்த விலைக்கு வெளிநாட்டு அங்காடியில் பொருட்க்களை குவிப்பதாகும்
- ⇨ சுங்க ஒன்றியம் என்பது சுங்க வரி அல்லது பங்களாவுகள் இல்லாமல் , தாராளமாக வாணிபத்தில் ஈடுபடும் நாடுகளின் அமைப்பாகும்
- ⇨ தாராள வாணிபம் என்பது தடையற்ற வாணிபம் ஆகும்
- ⇨ வாணிப உருவாக்கம் என்பது சுங்க ஒன்றியத்தின் எல்லைக்குட்பட்ட குறைந்த செலவில் உற்பத்தி செய்பவர்களிடமிருந்து இறக்குமதி செய்வதன் மூலம் உள்நாட்டு உற்பத்தியை மாற்றியமைத்தல் ஆகும்

அச்சமில்லை 9786226622

⇨ வாணிப திருப்பம் என்பது சுங்க ஒன்றிய உறுப்பினரால்லாத நாட்டிடமிருந்து பெற்ற செலவு குறைந்த இறக்குமதியை செலவு மிகுந்த இறக்குமதியாக, தற்போது சுங்க ஒன்றிய உறுப்பினராக உள்ள நாட்டிர்க்கு மாற்றுவது ஆகும்

⇨ சுங்கவரி என்பது இறக்குமதி பொருட்கள் மீதான வரி ஆகும்

⇨ அந்நிய உதவி என்பது வெளிநாட்டு உதவி எனப்படும்

⇨ முதன்மைப் பொருட்கள் என்பது வேளாண்மைப் பொருட்கள் ஆகும்

⇨ தாராளமயமாக்குதல் என்பது பன்னாட்டு வாணிபத்தில் உள்ள கட்டுப்பாடுகளை நீக்குதல் ஆகும்

⇨ அந்நிய செலாவணி என்பது அந்நிய நாட்டு நாணயம் ஆகும்

⇨ பங்களவு என்பது இறக்குமதி செய்யப்படுகின்ற பொருட்களின் அளவு அல்லது மதிப்பு நிர்ணயிக்கப்பட்டு, அந்த அளவு மட்டுமே இறக்குமதி செய்யப்பட்ட வேண்டுமென்ற அரசின் கட்டுபாடு விதிப்பு ஆகும்

⇨ மூலதனப் பெயர்ச்சி என்பது மூலதனம் ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்க்கு இடம் பெயருதல் ஆகும்

⇨ சுங்கத் தீர்வைகள் என்பது இறக்குமதி வரி ஆகும்

⇨ தன்னிறைவு அடாதல் என்பது ஒரு நாடு தங்களுக்கு வேண்டியதை தாங்களே உற்பத்தி செய்து கொள்ளுதல் ஆகும்

⇨ மானியங்கள் என்பது சில குறிப்பிட்ட துறைகளுக்கு அரசின் நிதி உதவிகள் செய்வது ஆகும்

⇨ அறிவார்ந்த சொத்துரிமை என்பது கண்ணுக்குப் புலப்படாத சொத்துக்கள் உதாரணம் காப்புரிமை, பதிப்புரிமை போன்றவைகள் ஆகும்

⇨ இறக்குமதி பதிலீடு என்பது இறக்குமதி செய்யக் கூடிய பண்டங்களை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்தல் ஆகும்

அச்சமில்லை 9786 22 66 22

- பானவாட்டம் என்பது பொருட்களின் விலை குறைதல்; பணத்தின் மதிப்பு கூடுதல் ஆகும்
- மைய வங்கி என்பது ஒரு நாட்டின் தலைமை வங்கி ஆகும்
- மூலப்பொருட்கள் என்பது கச்சப் பொருட்கள் ஆகும்
- பிள்ளைப் பருவத் தொழில் என்பது ஆரம்பக் கட்டத்தில் உள்ள புதிய தொழில்கள் ஆகும்
- பணவியல் என்பது பணம் மற்றும் வங்கி தொடர்பான கருத்துக்கள் ஆகும்
- நிதியியல் என்பது அரசின் வருவாய், செலவினங்கள் மற்றும் கடன் பற்றிய இயல் ஆகும்
- வடக்கு நாடுகள் என்பது வளர்ச்சியடைந்த நாடுகள் ஆகும்
- தெற்க்கு நாடுகள் என்பது வளரும் நாடுகள் ஆகும்
- அந்நிய செலுத்து நிலை என்பது ஒரு நாடு மித்ரா நாடுகளுடன் கொண்டுள்ள பணவியல் தொடர்பான விவரக் குறிப்புகள் ஆகும்
- வாணிப சமநிலை என்பது கண்ணுக்கு புலனாகும் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி விவரங்கள் ஆகும்
- பண மதிப்பு குறைப்பு என்பது ஒரு நாட்டின் நாணய மதிப்பை மற்றொரு நாட்டு நாணய மதிப்புடன் குறைத்துக் கொள்ளுதல் ஆகும்
- பரிமாற்றக் கட்டுப்பாடுகள் என்பது அரசாங்கம் அல்லது மத்திய வங்கி செலுத்து நிலை ஆதாரங்களை கட்டுப்படுத்தி கையிருப்பாக மாற்றுதல் ஆகும்
- இறக்குமதி பங்களவுகள் என்பது இறக்குமதி தொடர்பான அரசாங்கத்தின் கட்டுபாடு ஆகும்
- பொதுத் துறை என்பது அரசிற்க்கு சொந்தமான துறைகள் ஆகும்

அச்சமில்லை 9786 22 66 22

- அந்நிய முதலீடு என்பது வெளிநாட்டினர் ஒரு நாட்டில் செய்கின்ற முதலீடு ஆகும்
- கசிவுகள் என்பது ஒரு வருமானம் மற்றொரு வருமானத்தை உருவாக்காத நிலையைக் குறிப்பதாகும்
- அந்நிய செலாவணி என்பது ஒரு நாட்டிற்கும், மற்றொரு நாட்டிற்கும் இடயேயான கொடுக்கல், வாங்கல்களை தீர்த்து வைக்க உதவும் ஓர் சாதனம் ஆகும்
- அந்நிய செலாவணி சந்தை என்பது அந்நிய நாட்டுப் பணங்கள் வாங்கப்படும் மற்றும் விர்க்கப்படும் இடங்கள் ஆகும்
- அந்நிய செலாவணி பரிமாற்று வீதம் என்பது ஓர் அலகு அந்நிய நாணயத்திர்க்கு கொடுக்கப்படும் உள்நாட்டு நாணயத்தின் விலை ஆகும்
- நிலையான பரிமாற்ற விகிதம் என்பது மாறாத மாற்று விகிதம் ஆகும்
- இணங்கக் கூடிய பரிமாற்ற விகிதம் என்பது மாறுகின்ற மாற்று விகிதம் அல்லது நெகிழ்வுள்ள மாற்று விகிதம் ஆகும்
- ஊக வாணிப செலாவணி சந்தை என்பது ஒரு அன்னிய செலாவணி சந்தையில் குறைவான விலையில் அயல்நாட்டு செலாவணியைப் பெற்று அதனை மற்றொரு சந்தையில் அதிக விலைக்கு விற்பனை செய்து இலாபம் பெறுதல் ஆகும்
- நேரடிக் கட்டுப்பாடுகள் என்பது ஏற்றுமதி மற்றும் இறக்குமதி மீது விதிக்கப்படும் நேரடியான கட்டுப்பாடுகள் ஆகும்
- நாணய மாற்றுக் கட்டுபாடு என்பது இயல்பாக நாணய மாற்றுவீதம் இருக்க வேண்டிய நிலையை விட்டு அதனை மாற்றி நிலை நிறுத்த அரசு எடுக்கும் நடவடிக்கைகள் ஆகும்

அச்சமில்லை 9786226622

- மேலிருக்குதல் என்பது சந்தை விலையைவிட அரசு கட்டுப்படுத்திய விலை அதிகமாக இருத்தல் ஆகும்
- கீழிருக்குதல் என்பது சந்தை விலையை விட அரசு கட்டுப்படுத்திய விலை குறைவாக இருத்தல் ஆகும்
- சமநிலை என்பது மாற்றமற்ற நிலையைக் குறிக்கும்
- உள்நாட்டு சமநிலை என்பது பொருளாதார அமைப்புகள் அனைத்து மாறிகளும் திரும்பத் திரும்பத் தொடர்ந்து செயல்படுதல் ஆகும்
- வெளிநாட்டு சமநிலை என்பது அயல்நாட்டுப் பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் திட்டமிட்ட கொள்முதலும், உள்நாட்டுப் பண்டங்கள் , பணிகள் ஆகியவற்றின் திட்டமிட்ட கொள்முதலும் சமமாக இருக்கும் நிலை ஆகும்
- மூடப்பட்ட பொருளாதாரம் என்பது ஒரு நாடு மற்ற நாடுகளுடன் தொடர்பற்ற நிலை ஆகும்
- FE வளைகோடு என்பது அன்னிய செலாவணிச் சந்தை சமநிலையில் உள்ள பொழுது நிலவக் கூடிய வட்டி விகிதம் மற்றும் நாடு வருமான இணைப்பைக் காட்டக் கூடிய கோடு ஆகும்
- பெருக்கி என்பது முதலீட்டில் ஏற்படுகின்ற மாறுதல்களுக்கும் வருமானத்தில் ஏற்படுகின்ற மாறுதல்களுக்கும் உள்ள விகிதம் ஆகும்
- இருப்பு நிதி என்பது ஓர் உறுப்பு நாடு பங்களவிற்க்கு மேல் கணக்கில் வைத்திருக்கும் பணம் ஆகும்
- பன்னாட்டு நீர்மை என்பது ஒரு நாட்டின் மைய வங்கி வைத்திருக்கும் உலக நாடுகள் ஏற்றுக் கொள்ளக் கூடிய சொத்துக்கள் ஆகும்
- யூரோ டாலர் என்பது அமெரிக்கவைத் தவிர்த்து பிற நாடுகளின் வங்கிகளில் உள்ள டாலர் இருப்பு ஆகும்

அச்சமில்லை 9786226622

www.kalvikural.com


- செலாவணி மாற்று வீதம் என்பது ஒரு நாட்டின் பணம் பிற நாடுகளின் பணத்திர்க்கு மாற்றப்படும் விகிதம் ஆகும்
- பரிமாற்ற கட்டுபாடுகள் என்பது அரசாங்கம் அல்லது மத்திய வங்கி செலுத்து நிலை ஆதாரங்களை கட்டுப்படுத்தி கையிருப்பாக மாற்றுதல் ஆகும்
- பன்னாட்டு பண ( நாணய ) நிதி என்பது நிலையான நாணய மாற்று விகிதத்தை ஏற்படுத்தவும், செலுத்து நிலைச் சீர்கேடுகளை சமன் செய்யவும் தேவையான உதவிகளை அளிக்கும் பன்னாட்டு அமைப்பு ஆகும்
- சிறப்பு எடுப்பு உரிமை என்பது இத்திட்டம் ஒரு வங்கி கணக்கைப் போன்றது. ஆனால் இதில் வைப்புக்களை உருவாக்க வேண்டாம். பன்னாட்டு பண நிதியில் சிறப்பு எடுப்பு உரிமைகள் உருவாக்கப்படும். இதனை பங்கு பெறும் நாடுகள் ஒதுக்கீடுகளாக ஏற்றுக் கொண்டு, பன்னாட்டு கொடுக்கல் வாங்களை தீர்த்துக் கொள்ளலாம்
- பன்னாட்டு வங்கி ( உலக வங்கி) புனரமைப்பிற்க்கும், வளர்முக நாடுகளின் முன்னேற்றத்திர்க்கும் உதவும் பன்னாட்டு அமைப்பு ஆகும்
- பன்னாட்டு நிதிக் கழகம் என்பது பின்தங்கிய நாடுகளின் தனியார் துறைக்கு நடைமுறை முதலைக் கடனாக வழங்கும் அமைப்பு ஆகும்
- பன்னாட்டு வளர்ச்சி மன்றம் என்பது குறைந்த வட்டியில், எளிய விதிமுறைகளில் நீண்டக் கால்க் கடனளிக்கும் நிறுவனமாகும்
- மெது கடன் என்பது எளிய விதிமுறைகளுடன், குறைவான வட்டி வீதத்தில் அளிக்கப்படும் கடன் ஆகும்
- ஆசிய வளர்ச்சி வங்கி என்பது ஆசிய நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு துணைப்புரியும் வங்கி ஆகும்

அச்சமில்லை 9786 22 66 22

www.kalvikural.com


- புதிய பன்னாட்டு பொருளாதார அமைப்பு என்பது தடைகளற்ற வர்த்தகத்தின் மூலம், அனைத்து நாடுகளும், பொருளாதார சமநிலை எய்திட பாடுபடும் அமைப்பு ஆகும்
- ஒபெக் ( OPEC ) நாடுகள் என்பது கச்சா எண்ணைய் உற்பத்திசெய்யும் நாடுகள் ஆகும்
- ஐரோப்பியச் செலாவணி அலகு ( European Curremcy Unit ) என்பது ஐரோப்பிய பணத்துறை அமைப்பினால் விளக்கப்படும் கணக்கிட்டு அலகு. ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகளின் செலாவணிகளின் நிறையிட்ட சராசரி அடிப்படையில் அமைந்தது ஆகும்
- ஐரோப்பிய பணத்துறை அமைப்பு ( European Monetary System ) என்பது ஐரோப்பிய பானவாக்க அமைப்பு. ஐரோப்பாவில் பானவாக்கக் கொள்கைகளையும் நாணயமாற்று விகிதங்களையும் ஒருங்கிணைப்பதர்க்காக 1979 இல் நிறுவப்பட ஐரோப்பிய அமைப்பாகும்
- ஐரோப்பிய பணத்துறை பயிற்ச்சி நிறுவனம் ( European Monetary institute ) என்பது மாஸ்ட்ரிச் உடன்படிக்கைப்படி அமைக்கப்பட்ட ஐரோப்பிய மையவங்கியின் முன்னோடி நிறுவனமாகும்
- ஐரோப்பிய பணத்துறை கூட்டுறவு நிதியம் ( European Monetary Cooperation fund ) என்பது ஐரோப்பிய பணவாக்க அமைப்பின் நிறுவனம். உறுப்பு நாடுகளுக்கு குறுங்கால மற்றும் நடுத்தரக்கால செலுத்து நிலை உதவிகளை அளிப்பது ஆகும்
- மாஸ்ட்ரிச்ட் உடன்படிக்கை ( Mastrtch Treaty ) மாஸ்ட்ரிச்ட் எனும் டச்சு நகரில் 1991 இல் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கை ஆகும். இதன் படி ஐரோப்பிய பணத்துறை பயிற்ச்சி நிறுவனம் நிறுவப்பட்டது. ஐரோப்பிய பணவாக்க ஒன்றியம் அமைக்கப்படுவதற்க்கான கால அட்டவணை

அச்சமில்லை 9786 22 66 22

நிர்ணயிக்கப்பட்டது. உறுப்பு நாடுகள் ஆவதர்க்ககான தகுதிகள் நிர்ணயிக்கப்பட்டன.

- ஐரோப்பிய மைய வங்கி ( European Central Bank ) ன்பது ஐரோப்பிய பணத்துறை ஒன்றியத்தின் மைய நிறுவனமாகும்
- ஐரோப்பிய ஒன்றியம் ( European Union ) என்பது முன்னாள் ஐரோப்பிய சமுதாயம் ( European Community ) 1993 முதல் இப்பெயரில் அழைக்கப்படுகிறது
- யூரோ என்பது யூரோ நாடுகளின் ஒரே செலாவணி ஆகும்
- தற்பொழுது ஐரோப்பியக் கழகம் ( EU ) என அழைக்கப்படும் ஐரோப்பிய பொருளாதார கழகம் ( EEC ) 1958 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது.
- இது தொடக்கத்தில் ஐரோப்பிய பொதுச் சந்தை ( European Common market ( ECM ) ) என அழைக்கப்பட்டது
- ஐரோப்பிய கழகம் தனி ஒரு சந்தையாக ஒருங்கிணைக்கப்பட்ட, உலகிலேயே மிகப் பெரிய வாணிபத் தொகுதியாக கருதப்படுகிறது
- ஐரோப்பியக் கழகம் யூரோ ( EURO ) என்ற தனி ஒரு நாணயத்தை ஏற்றுக் கொண்டுள்ளன.
- வட அமெரிக்கா தடையற்ற வாணிப பகுதி ( NAFTA ) 1994 ஆம் ஆணு ஜனவரி மாதம் ஒன்றாம் தேதி நடைமுறைக்கு வந்தது.
- தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கழகம் ( ASEAN ) 1993 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் சிங்கபூர், புரூனி, மலேசியா, பிலிபைன்ஸ், தாய்லாந்து மற்றும் இந்தோனேஷியா ஆகிய ஆறு நாடுகளின் குழுவால் அமைக்கப்பட்டது
- சமீபத்தில் கம்போடியா, மியான்மார், வியட்நாம் ஆகிய மூன்று நாடுகள் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கழக அமைப்பில் சேர்ந்தன.

அச்சமில்லை 9786226622